ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2494/10 - 2026 ජූනි මස 23 වැනි අඟහරුවාදා - 2026.06.23

2494/10 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

(முத்திரை)

**அநுர குமார திசாநாயக்க**

**சேவாபிமானீ பதக்கம்**

**நலம் பெறுக!**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியும், அரசின் தலைவரும், நிறைவேற்றுத் துறையின் மற்றும் அரசாங்கத்தின் தலைவரும் படைதாங்கு சேவைகளின் பிரதானியுமான அநுர குமார திசாநாயக்க ஆகிய என்னால், அனைவருக்கும் நல்லாசியுடன் இவ்வாறு அறிவிக்கப்படுகின்றது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தரைப்படை, கடற்படை மற்றும் வான்படையில் நிரந்தர மற்றும் தொண்டர் படையணிகளில் அனைத்துப் பதவிகளை வகிப்போருக்கும் சேவையைப் பாராட்டி வழங்கப்பட்டுள்ள சேவாபிமானீ பதக்கம் தொடர்பான ஒழுங்குவிதிகளை திருத்தம் செய்தல் எனது அபிலாஷை என்பதால்,

2112/32 ஆம் இலக்க மற்றும் 2019 பெப்புருவரி 28 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி மற்றும் 2146/12 ஆம் இலக்க மற்றும் 2019 ஒற்றோபர் 21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்களை, இதுவரை அந்த அறிவித்தல்களின் கீழ் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு பாதகம் ஏற்படாத வகையில் இத்தால் இரத்துச் செய்து, சேவாபிமானீ பதக்கத்தினை வழங்கும் பணியை நிர்வகிப்பதற்காக இதன்பின்னர் மீற முடியாதவாறு பேணப்பட வேண்டிய விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் நான் இவ்வாறு வகுத்து விதித்தமைத்து நிறுவுகின்றேன்.

**முதலாவது:**

குறியீட்டுப் பெயர் மற்றும் அறிமுகம்:- இந்தப் பதக்கம் "சேவாபிமானீ பதக்கம்" எனக் குறிக்கப்பட வேண்டும் என விதிக்கப்படுகிறது.

1A - G 47106 — 354 (2026/06)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**இரண்டாவது:**

விபரம் :- தங்க நிறமான உலோகத்தில், 3.7 செ.மீ. விட்டத்துடன் எட்டு இதழ்களைக் கொண்டு ஒரு தாமரை மலர் வடிவத்திற்கமைய உருவாக்கப்பட வேண்டிய இப்பதக்கத்தின் முன்பக்கத்தின் நடுவில் இலங்கைத் தரைப்படையைப் பிரதிபலிக்கின்ற நுணிகள் மேல் நோக்கி ஒன்றுக்கொன்று குறுக்கே உள்ள இரண்டு வாள் சின்னத்துடனும், இலங்கைக் கடற்படையை பிரதிபலிக்கின்ற நங்கூரமொன்றில் அதனைச் சுற்றி சங்கிலி ஒன்றைச் சுற்றியுள்ள விதத்தில் மேல் நோக்கி உயர்ந்து இருக்கின்ற அதன் மேல் இலங்கை வான்படையை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தலையை இடது பக்கம் திருப்பிக் கொண்டு பறக்கும் பருந்து ஒன்றையும், அதனைச் சுற்றி சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் எனும் மும்மொழிகளால் “சேவாபிமானீ பதக்கம்” எனும் வாசகத்தைச் செதுக்கிக் காட்டுதல் வேண்டும். பின்புறத்தில், தாமரை மலர் இதழ்களையுடைய கரையால் சூழப்பட்ட இலங்கையின் பரம்பரைக்குரிய சின்னமான சிங்கத்தின் உருவத்தையும், அதனைச் சுற்றிச் செல்லும் நெற்கதிர் அலங்காரத்தினால் மற்றும் உச்சியில் இருக்கும் தர்மசக்கரத்தினாலும், அடியில் நிறைகுடத்தினாலும், நிறைகுடத்திற்கு வலது பக்கத்தில் ஒளிக் கதிர் வீசும் சூரியனையும் இடது பக்கத்தில் சந்திரனையும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரச இலட்சினையும், அதன் கீழ் தாபிக்கப்பட்ட வருடமான 2009 உம் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

**மூன்றாவது:**

பட்டி:- பட்டியின் நீளம் 5 செ.மீ. உம், அகலம் 3.1 செ.மீ. உம் ஆகக் காணப்படுவதோடு, அதன் வலது மற்றும் இடது பக்கங்களில் முறையே 0.8 செ.மீ. அளவையுடைய இளநீல மற்றும் பிரகாசமான கடுநீல நிறத்தையுடைய இரண்டு கோடுகளையும், நடுவில் 1.5 செ.மீ. கடும் செம்மஞ்சள் நிறக் கோட்டினையும் கொண்டதாக இருக்க வேண்டியதோடு, அந்த பட்டி தொங்கவிடப்படக்கூடிய விதத்தில் தயாரிக்கப்பட்ட பதக்கத்தை இடது பக்க மார்பில் அணிய வேண்டும் என விதிக்கப்படுகிறது.

**நான்காவது:**

தகைமைகள்:- 2009.05.19 ஆம் திகதியிலிருந்து போருக்குப் பின்னரான செயற்பாடுகளுக்காக பங்களிப்புச் செய்த, ஆரம்பப் பயிற்சி பாடநெறிக் காலம் தவிர்ந்த ஆறு வருடங்களுக்கு குறையாத எண்ணிக்கையான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள, நடத்தை மற்றும் இருப்பைக் கவனத்திற் கொண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தரைப்படை, கடற்படை மற்றும் வான்படையில் நிரந்தர மற்றும் தொண்டர் படையணிகளில் அனைத்துப் பதவிகளை வகிப்பவர்களுக்கு மட்டும் இதனகத்துப் பின்னர் ஆக்கப்பட்டுக் காட்டப்படுகின்ற நிபந்தனைகளுக்கு அமைவாக இந்த அணிவிப்பு வழங்கப்பட வேண்டுமென விதிக்கப்படுகிறது.

**ஐந்தாவது:**

பதிவு செய்தல்:- சனாதிபதி அவர்களின் அங்கீகாரத்தின் பின் பதக்கம் வழங்கப்பட்டிருக்கும் அனைவரினதும் பெயர்கள், சம்பந்தப்பட்ட சேவைக் கட்டளைகளில் வெளியிடப்பட வேண்டும் எனவும், உரிய படைதாங்கு சேவைத் தளபதிகளின் கட்டளையின் கீழ் அவர்களின் பெயர்ப்பட்டியலொன்று பேணப்பட வேண்டும் எனவும் விதிக்கப்படுகின்றது.

**ஆறாவது:**

அணியும் ஒழுங்கு முறைகள்:- பாராட்டு அணிவிப்பு மற்றும் பதக்கங்களை அணிய வேண்டிய ஒழுங்கு முறை காட்டப்படுகின்ற உத்தியோகபூர்வ ஆவணத்தின்படி படைதாங்கு சேவைகளின் நீடிப்பு பதக்கத்திற்கு பின் சேவாபிமானீ பதக்கத்தை அணிய வேண்டும் என விதிக்கப்படுகின்றது.

**ஏழாவது:**

குறுகிய வடிவம்:- பதக்கம் அணிபவர்களினால் சில சந்தர்ப்பங்களில் அணியப்படுவதும், சிறிய அளவிலான பதக்கம் எனக் குறிக்கப்படுகின்றதுமான சிறிய அளவிலான பதக்கத்தின் அளவு வழங்கப்பட்டுள்ள பதக்கத்தின் அளவில் கிட்டிய அரைவாசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அச்சிறிய வடிவத்தின் இலச்சினை விடப்பட்ட மாதிரி ஒன்றை சேவைத் தலைமையகங்களில் வைத்திருத்தல் வேண்டும் என விதிக்கப்படுகின்றது.

**எட்டாவது:**

உரித்தை இழக்கச் செய்தல் மற்றும் மீள உரித்தாக்குதல்:- இங்கு இதனகத்துப் பின்னர் விதிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளின் கீழ், எவரேனும் நபர் ஒருவருக்கு அளிக்கப்பட்டுள்ள பதக்கமொன்றை இரத்துச் செய்து நிராகரிப்பதற்கு சனாதிபதி அவர்களுக்கு இயலும் எனவும், இருந்தும் அவ்வாறு உரித்து இழக்கச் செய்யப்பட்ட அளிப்பொன்றை மீண்டும் செல்லுபடியாக்கி வழங்குவதற்கும் அவர்களுக்குச் சட்டபூர்வமான அதிகாரம் உள்ளது எனவும் விதிக்கப்படுகின்றது. இரத்துச் செய்தல் அல்லது மீள வழங்குதல் தொடர்பான அறிவிப்பை அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் சம்பந்தப்பட்ட சேவைக் கட்டளைகளில் வெளியிடுதல் வேண்டும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரச இலட்சினையின் கீழ், இரண்டாயிரத்து இருபத்தாறாம் ஆண்டு யூன் மாதம் 12 ஆம் திகதி கொழும்பு சனாதிபதி அலுவலகத்தில் வெளியிடப்பட்டது.

அதிமேதகு சனாதிபதியின் ஆணைப்படி,

கலாநிதி **என். எஸ். குமாநாயக்க,**
சனாதிபதியின் செயலாளர்.

**சேவாபிமானீ பதக்கம்**

சனாதிபதி ஆணைச்சீட்டில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு விளக்கமாக சேவாபிமானீ பதக்கமளிப்பதற்கு, உரித்தை இழக்கச் செய்வதற்கு, மீண்டும் உரித்தளிப்பதற்கு மற்றும் அது தொடர்பான ஏனைய விடயங்களுக்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கௌரவ சனாதிபதி அவர்களினால் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

அதிமேதகு சனாதிபதியின் ஆணைப்படி,

கலாநிதி **என். எஸ். குமாநாயக்க,**
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு - 01,
2026 *யு*ன் மாதம் 12 ஆம் திகதி.

**சேவாபிமானீ பதக்கம்**

1. இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு மே மாதம் பத்தொன்பதாம் திகதி முதல் போருக்குப் பின்னரான செயற்பாடுகளில் பங்களிப்புச் செய்த இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு மே மாதம் பதினெட்டாம் திகதி அல்லது அதற்கு முன்னர் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற இராணுவ உறுப்பினர்கள் தவிர்ந்த இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு மே மாதம் பத்தொன்பதாம் திகதியில் செயலூக்கத்துடன் சேவையில் ஈடுபட்டிருந்த மற்றும் அதற்குப் பின்பு சேவையில் சேர்ந்த தரைப்படை, கடற்படை மற்றும் வான்படையில் நிரந்தர மற்றும் தொண்டர் படையணிகளைச் சேர்ந்தவர்களுமான, ஆரம்ப பயிற்சிப் பாடநெறியைத் தவிர ஆறு வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்கின்றவர்களுமான எந்தவொரு பதவிக்குரிய நபரும் சேவாபிமானீ பதக்கம் பெற்றுக்கொள்வதற்குத் தகைமையுடையவர்களாவார்கள்.

2. இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு மே மாதம் பத்தொன்பதாம் திகதி தொடக்கம் ஆறு வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் ஓய்வுபெற்ற, சேவையிலிருந்து நீக்கப்பட்ட அல்லது சேவையிலிருந்து விலகிச் சென்றவர்கள் இப்பதக்கத்துக்கு உரித்தற்றவர்களாவர்.

3. இறந்தவரொருவருக்காக வழங்கப்படும் பதக்கத்தை அவரது சட்டபூர்வமான நெருங்கிய உறவினர் அல்லது அந்த உறவினரால் பெயரிடப்பட்ட நபரொருவர் பெற்றுக்கொள்ளலாம்.

4. சேவாபிமானீ பக்கத்தை வழங்குவதற்காக விதித்துரைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் உரிய படைத் தளபதியினால் பெயரிடப்படும் மூன்று பேருக்குக் குறையாத எண்ணிக்கையைக் கொண்ட சபையினால் பரிசீலனை செய்யப்படல் வேண்டும். அந்த சபையினால் செய்யப்படும் பரிந்துரைகளை குறித்த படைத்தாங்கு சேவைத் தளபதியின் பரிந்துரைகளுடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஊடாக சனாதிபதி அவர்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பித்தல் வேண்டும்.

5. ஒவ்வொரு பரிந்துரையுடனும் பரிந்துரைக்கப்பட்ட நபரது இலக்கம், பதவி, பெயர் மற்றும் முழுப்பெயர் உட்பட ஏனைய ஏற்புடைய அனைத்து விபரங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

6. பதக்கம் பெற்றவர்களின் பெயர்கள் உரிய சேவைக் கட்டளைகளில் வெளியிடப்படல் வேண்டும். அப்பதக்கம் பெறுநர்கள் அனைவரினதும் பெயர்ப் பதிவேடொன்றைக் குறித்த படைதாங்கு சேவைத் தளபதியின் கட்டளையின் கீழ் பேணுதல் வேண்டும்.

7. இப்பதக்கம் பெற்றிருப்பவர் ஒருவர் இராணுவ நீதிமன்றத் தீர்ப்புக்கமைய அல்லது வேறு நீதிமன்றத் தீர்ப்புக்கமைய மரண தண்டனைக்கு ஆளானால், அப்போது சனாதிபதி அவர்களால் இதற்கு வேறான முறையிலான கட்டளை பிறப்பிக்கப்படாவிடின், அவருக்கு அளிக்கப்பட்ட அப்பதக்கம் இழக்கப்படுதல் வேண்டும்.

8. சேவைகளிலிருந்து விலக்கப்படும் மற்றும் நீக்கப்படும் அல்லது அதிகாரவாணையை இராஜினாமா செய்வதற்கு அல்லது ஓய்வுபெறுவதற்கு விதிக்கப்படும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் சனாதிபதி அவர்களினால் இதற்கு வேறான முறையிலான கட்டளை பிறப்பிக்கப்படாமல் இருக்கும் வரை அவருக்கு அளிக்கப்பட்ட அப்பதக்கம் இழக்கப்படுதல் வேண்டும்.

9. அவமரியாதையோடு அல்லது அபகீர்த்திக்கு உள்ளாகி சேவைகளிலிருந்து விலக்கப்படும் இராணுவ உறுப்பினரொருவருக்கு சனாதிபதி அவர்களினால் இதற்கு வேறான முறையிலான கட்டளை பிறப்பிக்கப்படும் வரை அவருக்கு அளிக்கப்பட்ட அப்பதக்கம் இழக்கப்படுதல் வேண்டும்.

10. இப்பதக்கத்தைப் பெற்றிருப்பவர் தேசத் துரோகம், நாட்டுப் பிளவு, கிளர்ச்சி, கோழைத்தனம், சேவையை கைவிட்டுச் செல்லல் அல்லது இயற்கைக்கு மாறான நடத்தை போன்ற குற்றங்களுக்கு குற்றவாளியாக இருந்தால் அல்லது துர்நடத்தை காரணமாக சேவையிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது விலக்கப்பட்டால் அல்லது சேவை சட்டத்திற்கு உட்பட்டு இருக்கும் போது சிவில் அதிகாரிகளினால் குற்றவாளியாக்கப்பட்டிருப்பின், அப்போது சனாதிபதி அவர்களினால் இதற்கு வேறான முறையிலான கட்டளை பிறப்பிக்கப்படாமல் இருக்கும் வரை அவருக்கு அளிக்கப்பட்ட அப்பதக்கம் இழக்கப்படுதல் வேண்டும்.

11. எந்தவொரு நபரினதும் உரித்து இழக்கச் செய்யப்பட்ட பதக்கம் சனாதிபதி அவர்களினால் தனது தற்றுணிவின்படி மீண்டும் உரித்தாக்கி வழங்கப்படலாம்.

12. உரித்து இழக்கச் செய்தல் அல்லது மீண்டும் உரித்தாக்கி வழங்குதல் இடம்பெறும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அது பற்றிய அறிவித்தல் சேவைக் கட்டளைகளில் வெளியிடப்படல் வேண்டும்.

13. எவரேனும் உத்தியோகத்தர் ஒருவர் அல்லது தரைப்படை வீரர் ஒருவர் அல்லது கடற்படை வீரர் ஒருவர் அல்லது வான்படை வீரர் ஒருவர் தனது தொலைந்த பதக்கத்திற்குப் பதிலாக புதிய பதக்கமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்ப்பாராயின், அப்போது அந்த உத்தியோகத்தர் அல்லது தரைப்படை வீரர் அல்லது கடற்படை வீரர் அல்லது வான்படை வீரர் அப்பதக்கம் தொலைந்து போன விதம் பற்றிய வாக்குமூலமொன்றை கட்டளையிடும் அதிகாரியிடம் / உயர் அதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அதன் பின்னர் அந்த வாக்குமூலம் உரியமுறையில் சனாதிபதி அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பதக்கம் தொலைந்தமை தொடர்பில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் திருப்திகரமானவை என ஏற்றுக்கொள்ளப்பட்டால், தொலைந்த பதக்கத்திற்குப் பதிலாக வேறொரு பதக்கத்தை உரிய தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

14. 2112/32 ஆம் இலக்க மற்றும் 2019 பெப்புருவரி 28 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி மற்றும் 2146/12 ஆம் இலக்க மற்றும் 2019 ஒற்றோபர் 21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்களின் கீழ் பாராட்டு சேவைப் பதக்கம் உரித்தாக்கப்பட்ட நபர்களும் இந்த அறிவித்தலின் கீழ் பதக்கம் உரித்தாக்கப்பட்டவர்களாக கருதப்பட்ட வேண்டும் என்பதுடன், அந்த நபர்கள் தொடர்பாகவும் இந்த அறிவித்தலின் ஏற்பாடுகள் அவ்வாறே ஏற்புடையதாகும்.

15. இவ் ஒழுங்குவிதிகளில் :-

(அ) “படைதாங்கு சேவைத் தளபதிகள்” என்பதில் - தரைப்படைத் தளபதி, கடற்படைத் தளபதி மற்றும் வான்படைத் தளபதி

(ஆ) “இராணுவ உறுப்பினர்” என்பதில் - தரைப்படை, கடற்படை மற்றும் வான்படை உறுப்பினர்கள்

உள்ளடங்குகின்றனர்.

சேவாபிமானீ பதக்கம்

பின்பக்கம்




முன்பக்கம்



EOG 06 - 0280/1

---

**சேவைப் பதக்கம்**

**நலம் பெறுக!**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியும், அரசின் தலைவரும், நிறைவேற்றுத் துறையின் மற்றும் அரசாங்கத்தின் தலைவரும் படைதாங்கு சேவைகளின் பிரதானியுமான அநுர குமார திசாநாயக்க ஆகிய என்னால், அனைவருக்கும் நல்லாசியுடன் இவ்வாறு அறிவிக்கப்படுகின்றது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தரைப்படை, கடற்படை மற்றும் வான்படையில் நிரந்தர மற்றும் தொண்டர் படையணிகளில் அனைத்துப் பதவிகளை வகிப்போருக்கும் சேவையைப் பாராட்டி வழங்கப்பட்டுள்ள சேவைப் பதக்கம் தொடர்பான ஒழுங்குவிதிகளை திருத்தம் செய்தல் எனது அபிலாஷை என்பதால்,

2112/32 ஆம் இலக்க மற்றும் 2019 பெப்புருவரி 28 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி மற்றும் 2146/12 ஆம் இலக்க மற்றும் 2019 ஒற்றோபர் 21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்களை, இதுவரை அந்த அறிவித்தல்களின் கீழ் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு பாதகம் ஏற்படாத வகையில் இத்தால் இரத்துச் செய்து, சேவைப் பதக்கத்தினை வழங்கும் பணியை நிர்வகிப்பதற்காக இதன்பின்னர் மீற முடியாதவாறு பேணப்பட வேண்டிய விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் நான் இவ்வாறு வகுத்து விதித்தமைத்து நிறுவுகின்றேன்.

**முதலாவது:**

குறியீட்டுப் பெயர் மற்றும் அறிமுகம்:- இந்தப் பதக்கம் “சேவைப் பதக்கம்” எனக் குறிக்கப்பட வேண்டும் என விதிக்கப்படுகிறது.

**இரண்டாவது:**

விபரம் :- இந்தப் பதக்கமானது தங்க ரோஜா நிற உலோகத்தில் ஒரு பக்கத்தில் 2.2 செ.மீ. நீளமான நாற்கோணி வளைவுடன் சதுரமாக தயாரிக்கப்பட வேண்டியதுடன், இந்தப் பதக்கத்தின் முன்பக்கமாக நடுவில் இலங்கைத் தரைப்படையைப் பிரதிபலிக்கின்ற நுனிகள் மேல் நோக்கி ஒன்றுக்கொன்று குறுக்கே உள்ள இரண்டு வாள் சின்னத்துடனும், இலங்கைக் கடற்படையை பிரதிபலிக்கின்ற நங்கூரமொன்றில் அதனைச் சுற்றி சங்கிலி ஒன்றைச் சுற்றியுள்ள விதத்தில் மேல் நோக்கி உயர்ந்து இருக்கின்ற அதன் மேல் இலங்கை வான்படையை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தலையை இடது பக்கம் திருப்பிக் கொண்டு பறக்கும் பருந்து ஒன்றையும், அதன் கீழ் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் எனும் மும்மொழிகளால் “சேவைப் பதக்கம்” எனும் வாசகத்தைச் செதுக்கிக் காட்டுதல் வேண்டும். பின்புறத்தில், தாமரை மலர் இதழ்களையுடைய கரையால் சூழப்பட்ட இலங்கையின் பரம்பரைக்குரிய சின்னமான சிங்கத்தின் உருவத்தையும், அதனைச் சுற்றிச் செல்லும் நெற்கதிர் அலங்காரத்தினால் மற்றும் உச்சியில் இருக்கும் தர்மச்சக்கரத்தினாலும், அடியில் நிறைகுடத்தினாலும், நிறைகுடத்திற்கு வலது பக்கத்தில் ஒளிக் கதிர் வீசும் சூரியனையும் இடது பக்கத்தில் சந்திரனையும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரச இலட்சினையும், அதன் கீழ் தாபிக்கப்பட்ட வருடமான 2009 உம் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும் என விதிக்கப்படுகிறது.

**மூன்றாவது:**

பட்டி:- இருபுறத்தினாலும் 0.8 செ.மீ. கடும் நீல நிறமான இரு கோடுகளையும், நடுவில் 1.5 செ.மீ. பிரகாசமான பச்சை நிறக் கோட்டையும் கொண்ட, 3.1 செ.மீ. அகலத்தையும், 5 செ.மீ. நீளத்தையும் கொண்ட பட்டி தொங்கவிடப்படக்கூடிய விதத்தில் தயாரிக்கப்பட்ட பதக்கத்தை இடது பக்க மார்பில் அணிய வேண்டுமென விதிக்கப்படுகிறது.

**நான்காவது:**

தகைமைகள்:- 2009.05.19 ஆம் திகதியிலிருந்து போருக்குப் பின்னரான செயற்பாடுகளுக்காக பங்களிப்புச் செய்த, ஆரம்பப் பயிற்சி பாடநெறிக் காலம் தவிர்ந்த மூன்று வருடங்களுக்கு குறையாத எண்ணிக்கையான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள, நடத்தை மற்றும் இருப்பைக் கவனத்திற் கொண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தரைப்படை, கடற்படை மற்றும் வான்படையில் நிரந்தர மற்றும் தொண்டர் படையணிகளில் அனைத்துப் பதவிகளை வகிப்பவர்களுக்கு மட்டும் இதனகத்துப் பின்னர் ஆக்கப்பட்டுக் காட்டப்படுகின்ற நிபந்தனைகளுக்கு அமைவாக இந்த அணிவிப்பு வழங்கப்பட வேண்டுமென விதிக்கப்படுகிறது.

**ஐந்தாவது:**

பதிவு செய்தல்:- சனாதிபதி அவர்களின் அங்கீகாரத்தின் பின் பதக்கம் வழங்கப்பட்டிருக்கும் அனைவரினதும் பெயர்கள், சம்பந்தப்பட்ட சேவைக் கட்டளைகளில் வெளியிடப்பட வேண்டும் எனவும், உரிய படைதாங்கு சேவைத் தளபதிகளின் கட்டளையின் கீழ் அவர்களின் பெயர்ப்பட்டியலொன்று பேணப்பட வேண்டும் எனவும் விதிக்கப்படுகின்றது.

**ஆறாவது:**

அணியும் ஒழுங்கு முறைகள்:- பாராட்டு அணிவிப்பு மற்றும் பதக்கங்களை அணிய வேண்டிய ஒழுங்கு முறை காட்டப்படுகின்ற உத்தியோகபூர்வ ஆவணத்தின்படி சேவாபிமானீ பதக்கத்திற்கு பின் சேவைப் பதக்கத்தை அணிய வேண்டும் என விதிக்கப்படுகின்றது.

**ஏழாவது:**

குறுகிய வடிவம்:- பதக்கம் அணிபவர்களினால் சில சந்தர்ப்பங்களில் அணியப்படுவதும், சிறிய அளவிலான பதக்கம் எனக் குறிக்கப்படுகின்றதுமான சிறிய அளவிலான பதக்கத்தின் அளவு வழங்கப்பட்டுள்ள பதக்கத்தின் அளவில் கிட்டிய அரைவாசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அச்சிறிய வடிவத்தின் இலச்சினை விடப்பட்ட மாதிரி ஒன்றை சேவைத் தலைமையகங்களில் வைத்திருத்தல் வேண்டும் என விதிக்கப்படுகின்றது.

**எட்டாவது:**

உரித்தை இழக்கச் செய்தல் மற்றும் மீள உரித்தாக்குதல்:- இங்கு இதனகத்துப் பின்னர் விதிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளின் கீழ், எவரேனும் நபர் ஒருவருக்கு அளிக்கப்பட்டுள்ள பதக்கமொன்றை இரத்துச் செய்து நிராகரிப்பதற்கு சனாதிபதி அவர்களுக்கு இயலும் எனவும், இருந்தும் அவ்வாறு உரித்து இழக்கச் செய்யப்பட்ட அளிப்பொன்றை மீண்டும் செல்லுபடியாக்கி வழங்குவதற்கும் அவர்களுக்குச் சட்டபூர்வமான அதிகாரம் உள்ளது எனவும் விதிக்கப்படுகின்றது. இரத்துச் செய்தல் அல்லது மீள வழங்குதல் தொடர்பான அறிவிப்பை அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் சம்பந்தப்பட்ட சேவைக் கட்டளைகளில் வெளியிடுதல் வேண்டும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரச இலட்சினையின் கீழ், இரண்டாயிரத்து இருபத்தாறாம் ஆண்டு யூன் மாதம் 12 ஆம் திகதி கொழும்பு சனாதிபதி அலுவலகத்தில் வெளியிடப்பட்டது.

அதிமேதகு சனாதிபதியின் ஆணைப்படி,

கலாநிதி **என்.எஸ். குமாநாயக்க,**
சனாதிபதியின் செயலாளர்.

**சேவைப் பதக்கம்**

சனாதிபதி ஆணைச்சீட்டில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு விளக்கமாக சேவைப் பதக்கமளிப்பதற்கு, உரித்தை இழக்கச் செய்வதற்கு, மீண்டும் உரித்தளிப்பதற்கு மற்றும் அது தொடர்பான ஏனைய விடயங்களுக்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அவர்களினால் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

அதிமேதகு சனாதிபதியின் ஆணைப்படி,

கலாநிதி **என்.எஸ். குமாநாயக்க,**
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு - 01,
2026 யூன் மாதம் 12 ஆம் திகதி.

**சேவைப் பதக்கம்**

1. இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு மே மாதம் பத்தொன்பதாம் திகதி முதல் போருக்குப் பின்னரான செயற்பாடுகளில் பங்களிப்புச் செய்த இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு மே மாதம் பதினெட்டாம் திகதி அல்லது அதற்கு முன்னர் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற இராணுவ உறுப்பினர்கள் தவிர்ந்த இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு மே மாதம் பத்தொன்பதாம் திகதியில் செயலூக்கத்துடன் சேவையில் ஈடுபட்டிருந்த மற்றும் அதற்குப் பின்பு சேவையில் சேர்ந்த தரைப்படை, கடற்படை மற்றும் வான்படையில் நிரந்தர மற்றும் தொண்டர் படையணிகளைச் சேர்ந்தவர்களுமான, ஆரம்ப பயிற்சிப் பாடநெறியைத் தவிர மூன்று வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்கின்றவர்களுமான, நடத்தை மற்றும் இருப்பு தொடர்பாக திருப்தியடைகின்றவர்களுமான எந்தவொரு பதவிக்குரிய நபரும் சேவைப் பதக்கம் பெற்றுக்கொள்வதற்குத் தகைமையுடையவர்களாவார்கள்.

2. இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு மே மாதம் பத்தொன்பதாம் திகதி தொடக்கம் மூன்று வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் ஓய்வுபெற்ற, சேவையிலிருந்து நீக்கப்பட்ட அல்லது சேவையிலிருந்து விலகிச் சென்றவர்கள் இப்பதக்கத்துக்கு உரித்தற்றவர்களாவர்.

3. இறந்தவரொருவருக்காக வழங்கப்படும் பதக்கத்தை அவரது சட்டபூர்வமான நெருங்கிய உறவினர் அல்லது அந்த உறவினரால் பெயரிடப்பட்ட நபரொருவர் பெற்றுக்கொள்ளலாம்.

4. சேவைப் பக்கத்தை வழங்குவதற்காக விதித்துரைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் உரிய படைத் தளபதியினால் பெயரிடப்படும் மூன்று பேருக்குக் குறையாத எண்ணிக்கையைக் கொண்ட சபையினால் பரிசீலனை செய்யப்படல் வேண்டும். அந்த சபையினால் செய்யப்படும் பரிந்துரைகளை குறித்த படைதாங்கு சேவைத் தளபதியின் பரிந்துரைகளுடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஊடாக சனாதிபதி அவர்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பித்தல் வேண்டும்.

5. ஒவ்வொரு பரிந்துரையுடனும் பரிந்துரைக்கப்பட்ட நபரது இலக்கம், பதவி, பெயர் மற்றும் முழுப்பெயர் உட்பட ஏனைய ஏற்புடைய அனைத்து விபரங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

6. பதக்கம் பெற்றவர்களின் பெயர்கள் உரிய சேவைக் கட்டளைகளில் வெளியிடப்படல் வேண்டும். அப்பதக்கம் பெறுநர்கள் அனைவரினதும் பெயர்ப் பதிவேடொன்றைக் குறித்த படைதாங்கு சேவைத் தளபதியின் கட்டளையின் கீழ் பேணுதல் வேண்டும்.

7. இப்பதக்கம் பெற்றிருப்பவர் ஒருவர் இராணுவ நீதிமன்றத் தீர்ப்புக்கமைய அல்லது வேறு நீதிமன்றத் தீர்ப்புக்கமைய மரண தண்டனைக்கு ஆளானால், அப்போது சனாதிபதி அவர்களால் இதற்கு வேறான முறையிலான கட்டளை பிறப்பிக்கப்படாவிடின், அவருக்கு அளிக்கப்பட்ட அப்பதக்கம் இழக்கப்படுதல் வேண்டும்.

8. சேவைகளிலிருந்து விலக்கப்படும் மற்றும் நீக்கப்படும் அல்லது அதிகாரவாணையை இராஜினாமா செய்வதற்கு அல்லது ஓய்வுபெறுவதற்கு விதிக்கப்படும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் சனாதிபதி அவர்களினால் இதற்கு வேறான முறையிலான கட்டளை பிறப்பிக்கப்படாமல் இருக்கும் வரை அவருக்கு அளிக்கப்பட்ட அப்பதக்கம் இழக்கப்படுதல் வேண்டும்.

9. அவமரியாதையோடு அல்லது அபகீர்த்திக்கு உள்ளாகி சேவைகளிலிருந்து விலக்கப்படும் இராணுவ உறுப்பினரொருவருக்கு சனாதிபதி அவர்களினால் இதற்கு வேறான முறையிலான கட்டளை பிறப்பிக்கப்படும் வரை அவருக்கு அளிக்கப்பட்ட அப்பதக்கம் இழக்கப்படுதல் வேண்டும்.

10. இப்பதக்கத்தைப் பெற்றிருப்பவர் தேசத் துரோகம், நாட்டுப் பிளவு, கிளர்ச்சி, கோழைத்தனம், சேவையை கைவிட்டுச் செல்லல் அல்லது இயற்கைக்கு மாறான நடத்தை போன்ற குற்றங்களுக்கு குற்றவாளியாக இருந்தால் அல்லது துர்நடத்தை காரணமாக சேவையிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது விலக்கப்பட்டால் அல்லது சேவை சட்டத்திற்கு உட்பட்டு இருக்கும் போது சிவில் அதிகாரிகளினால் குற்றவாளியாக்கப்பட்டிருப்பின், அப்போது சனாதிபதி அவர்களினால் இதற்கு வேறான முறையிலான கட்டளை பிறப்பிக்கப்படாமல் இருக்கும் வரை அவருக்கு அளிக்கப்பட்ட அப்பதக்கம் இழக்கப்படுதல் வேண்டும்.

11. எந்தவொரு நபரினதும் உரித்து இழக்கச் செய்யப்பட்ட பதக்கம் சனாதிபதி அவர்களினால் தனது தற்றுணிவின்படி மீண்டும் உரித்தாக்கி வழங்கப்படலாம்.

12. உரித்து இழக்கச் செய்தல் அல்லது மீண்டும் உரித்தாக்கி வழங்குதல் இடம்பெறும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அது பற்றிய அறிவித்தல் சேவைக் கட்டளைகளில் வெளியிடப்படல் வேண்டும்.

13. எவரேனும் உத்தியோகத்தர் ஒருவர் அல்லது தரைப்படை வீரர் ஒருவர் அல்லது கடற்படை வீரர் ஒருவர் அல்லது வான்படை வீரர் ஒருவர் தனது தொலைந்த பதக்கத்திற்குப் பதிலாக புதிய பதக்கமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்ப்பாராயின், அப்போது அந்த உத்தியோகத்தர் அல்லது தரைப்படை வீரர் அல்லது கடற்படை வீரர் அல்லது வான்படை வீரர் அப்பதக்கம் தொலைந்து போன விதம் பற்றிய வாக்குமூலமொன்றை கட்டளையிடும் அதிகாரியிடம் / உயர் அதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அதன் பின்னர் அந்த வாக்குமூலம் உரியமுறையில் சனாதிபதி அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பதக்கம் தொலைந்தமை தொடர்பில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் திருப்திகரமானவை என ஏற்றுக்கொள்ளப்பட்டால், தொலைந்த பதக்கத்திற்குப் பதிலாக வேறொரு பதக்கத்தை உரிய தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

14. 2112/32 ஆம் இலக்க மற்றும் 2019 பெப்புருவரி 28 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி மற்றும் 2146/12 ஆம் இலக்க மற்றும் 2019 ஒற்றோபர் 21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்களின் கீழ் சேவைப் பதக்கம் உரித்தாக்கப்பட்ட நபர்களும் இந்த அறிவித்தலின் கீழ் பதக்கம் உரித்தாக்கப்பட்டவர்களாக கருதப்பட வேண்டும் என்பதுடன், அந்த நபர்கள் தொடர்பாகவும் இந்த அறிவித்தலின் ஏற்பாடுகள் அவ்வாறே ஏற்புடையதாகும்.

15. இவ் ஒழுங்குவிதிகளில் :-

| | | | |
|---|---|---|---|
| (அ) | ''படைதாங்கு சேவைத் தளபதிகள்'' என்பதில் | - | தரைப்படைத் தளபதி,<br>கடற்படைத் தளபதி மற்றும்<br>வான்படைத் தளபதி |
| (ஆ) | "இராணுவ உறுப்பினர்" என்பதில் | - | தரைப்படை, கடற்படை மற்றும்<br>வான்படை உறுப்பினர்கள் |

உள்ளடங்குகின்றனர்.

சேவைப் பதக்கம்

பின்பக்கம்



முன்பக்கம்



EOG 06 - 0280/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.